**புத்தல பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தல பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஒக்கம்பிட்டிய பொது நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த 39 புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 250,000 தொகையான மூலதன மானியம் கிடைக்க வேண்டிய வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நானாவித செலவினங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 26,488 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் பற்றுச்சீட்டிடப்பட்ட ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி வருமானம் ரூபா 2,208,634 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,161,755 ஆகக் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 46,879 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 21,332,939 ஆக இருந்த போதிலும் அது ரூபா 19,580,471 ஆகக் கருதி கணக்கு வைக்கப்பட்டமையினால் ரூபா 1,752,468 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காக மீளாய்வாண்டிற்குரியதாக் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 309,057 ஆக இருந்த போதிலும், அது ரூபா 801,760

எனக் கருதி கணக்கு வைக்கப்பட்டமையினால் ரூபா 492,703 தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,161,706 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 15,872,788 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டில் மோட்டார் கிரேடர், வீதிச் செப்பனிடுகை பெகோ லோடர் மற்றும் டிபர் வாகனம் என்பவற்றை வாடகைக்கு விட்ட வகையில் சபைக்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 6,702,008 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 327,798 நிலுவையான உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,978,468 தொகையான கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 381,000,165 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும், ரூபா 26,528,148 தொகையான 03 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) 49 ஆம் பிரிவு | திட்டமிடல் குழுவின் அங்கீகாரமின்றி பெல்வத்த சீனிக் கம்பனியின் வளவில் 04 பரிவர்த்தனை சமிக்ஞைக் கோபுரங்கள் மொபிடெல் கம்பனியினால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |

(ii) 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் — மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 18,451,167 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்

இலக்கம் 237 — சபையினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 65,460 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இருப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,363,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,393,801 ஆக இருந்தது.

### 2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 1,821,552 |
| முத்திரைக் கட்டணம் | 702,332 |

### 2.3 மிகை அறவீடு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 733,241 தொகை அறவிடவேண்டியிருந்தது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 04 இடங்களில் 2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிகளில் அனுமதியற்ற வகையில் பல்வேறு தொலைபேசிக் கம்பனிகளினால் 04 பரிவர்த்தனை கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்ட பரிவர்த்தனை சமிக்ஞைக் கோபுரங்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வாடகை அடிப்படையில் 03 தனியார் வாகனங்கள் சபையின் கடமைகளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 559,628 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 884,730 தொகை செலுத்தி வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் பழுதுபார்ப்பதற்கு முன்னர் மாவட்ட இயந்திரப் பொறியியலாளரின் சிபாரிசு பெறப்பட்டிருக்கவில்லை.

**3.3. சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) புத்தல பஸ் தரிப்பிடத்தில் 2012 திசெம்பர் 04 ஆந் திகதி தொடக்கம் 2013 யூலை 05 ஆந் திகதி வரை மின்சாரப் பயன்பாட்டிற்காக ரூபா 190,792 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதியில் பஸ்நிலையத்தில் அசாதாரண மின்சாரப் பயன்பாட்டைக் காண்பித்திருந்த போதிலும் அது தொடர்பான காரணம் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது மாலிகாவில மற்றும் ரஹதன்கம நீர்ச் செயற்திட்டத்தின் கிழ் நீர் இணைப்புக் கட்டணமாக 720 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 1,221,500 தொகை சபைக்கு அறவிடப்பட்டிருந்ததுடன் 2013 நவம்பர் 26 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நீர் இணைப்புக்களை வழங்குவதற்காக பீளேன் இலங்கை நிறுவனத்தின் மூலம் சபைக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,150,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் ரூபா 200,000 தொகை 23 நுகர்வோர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவிடப்பட்ட பணத்தை சபையின் வருமானத்திற்கு எடுக்காமைக்கும் 23 நுகர்வோர்களிற்கு மாத்திரம் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட்டமைக்குமான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான பாவனைக்கு எடுக்க முடியாத 49–1966 என்ற சிறிய டெக்ரர் மற்றும் 53-5078 என்ற டெக்ரரையும் அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்